பக்கங்கள் 18

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 30 செவ்வாய்க்கிழமை 17.10.2023 அதிர்வு 78

**‘சனல் 4’ வீடியோ விவகாரம்:**

## தெரிவுக்குழுவுக்கான பிரேரணை சமர்ப்பிப்பு

இலங்கையில் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் பிரிட்டனின் சனல் 4 வெளியிட்ட 04

# ஜனாதிபதி முறைமையை நீக்க முயன்றால் அதை ஆதரிப்போம்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுமானால் அதற்கு நாம் முழுமையாக ஆதரவு வழங்குவோம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 04



# ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்க முடியாது!

## புளொட் அமைப்பின் மூத்த உறுப்பினர் லிங்கநாதன் அதிரடிக் கருத்து

- கே. வசந்தரூபன் -

தமிழ்த் தேசிய கட்சிகள் அழைப்பு விடுத்துள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் புளொட் அமைப்பின் மூத்த உறுப்பினரும் வவுனியா நகர சபையின் முன்னாள் தலைவருமான ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-



“தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சேர்ந்த சிலர் கூடி வவுனியாவிலும் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தனர். எனினும், குறித்த கலந்துரையாடல் தொடர்பில் எனக்கு அறியக் கிடைக்கவில்லை. அத்துடன் குறித்த ஹர்த்தாலுக்கு நான் எனது எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றேன். இதற்கு ஆதரவு வழங்கப்போவதில்லை.

தமிழர்களின் போராட்டத்தை வைத்து சிலர் நோகாமல் நுங்கு குடிக்க ஆரம்பித்துள்ளனர். இதற்கு இடம் கொடுக்க முடியாது.” – என்றார்.

# தயாசிறிக்குப் புதிய பதவி வழங்குமாறு கோரிக்கை



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பதவியை வழங்குமாறு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் யோசனை முன்வைத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

தயாசிறி ஜயசேகர கட்சியுடன் இணைந்து பயணிக்க முன்வருமானால் தவிசாளர், செயலாளர் ,தேசிய அமைப்பாளர் ஆகிய பதவிகளைத்தவிர ஏனைய எந்தவொரு 04

# மன்னாரில் பஸ்ஸை மோதித் தள்ளிய டிப்பர்



- மன்னார் நிருபர் -

மன்னார் – முள்ளிக்குளம் வீதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸுடன் டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

முள்ளிக்குளத்தில் இருந்து மன்னார் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இ.போ.ச. பயணிகள் பஸ்ஸுடன் எதிர்த் திசையில் வந்த டிப்பர் வாகனம் மோதி 04

# ஈஸ்டர் தாக்குதல் இரகசிய பைல்கள் கோட்டாபய ராஜபக்ஷ வசம் உள்ளன

## நாடாளுமன்றில் மைத்திரி பரபரப்புத் தகவல்



உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக் குழுக்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சில இரகசிய பைல்களை வழங்கியுள்ளனர் என முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் கருத்து வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன –

பாதுகாப்பு ஆலோசகர் பேராசிரியர் ரொஹான் குணரத்ன, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்ட சில முக்கிய பைல்களை விசாரணைகளுக்காக ஒப்படைக்க முடியாதென ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கைகளை ஒருபோதும் வெளியில் வழங்க முடியாது எனவும் கூறுகிறார்.

நான் நியமித்திருந்த சில ஆணைக் குழுக்களில் தலைவர்கள் தமது விசாரணை அறிக்கைகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்த போது, அதற்கு மேலதிகமாக சில ரகசிய பைல்களையும் கையளித்துள்ளனர். அந்த இரகசிய பைல்களை குற்றப்புலனாய்வு பிரிவுக்கும், பொலிஸாருக்கும் வழங்க வேண்டாமென கூறியே வழங்கியுள்ளனர்.

அந்த பைல்களை தனிப்பட்ட ரீதியில் வைத்துக்கொள்ளுமாறும் கோட்டாபயவிடம் கூறியுள்ளனர்.

பாதுகாப்பு ஆலோசகர் பேராசிரியர் ரொஹான் குணரத்ன, ஒருபுறம் தம்மிடம் உள்ள பைல்கள், ரகசியமானவை, அவற்றை விசாரணைகளுக்கு கையளிக்க முடியாதென கூறுவதுடன், மறுபுறம் கோட்டாவிடம் ரகசிய கோப்புகளை வழங்கியுள்ளார்.

ஆகவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து விசாரணைகளும் பொய்யானவை என்பதுடன், அவை பக்கச்சார்பானவையாகும். எந்தவொரு விசாரணை அறிக்கையும் முழுமையானவை அல்ல.

"சனல் 4" தொலைக்காட்சி வெளியிட்டிருந்த ஆவணப்படம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க முற்படுகின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் இந்த விடயத்தில் கொண்டுள்ள அதே நிலைப்பாட்டையே நானும் கொண்டுள்ளேன்.

இதற்கு முன்னரும் இந்த நாடாளுமன்றத்தில் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. என்மீது விரோதம் கொண்டவர்களைத்தான் அந்தத் தெரிவுக்குழுவுக்கு நியமித்திருந்தனர். அந்தக் காலப்பகுதியில் அரசாங்கத்துக்குள் இருந்த முரண்பாடுகள் காரணமாக அந்தத் தெரிவுக்குழு தோல்வியடைந்த ஒரு தெரிவுக்குழுவாக இருந்தது.

நாடாளுமன்றத்தில் உள்ள கல்வி புலமை கொண்டவர்கள், சிறந்த அனுபவம் கொண்டவர்களை சபாநாயகர் இந்தக் குழுவுக்கு நியமிக்க வேண்டும். அதற்கு மாத்திரமே நான் இணக்கம் வெளியிடுகிறேன். கட்சிகளுக்கு இந்தக் குழுவை நியமிக்கும் அதிகாரங்கள் வழங்களை வேண்டாம். என் மீது விரோதம் கொண்டவர்களே கட்சிகளில் அதிகமாக உள்ளனர். ஆகவே, அரசின் பணத்தை வீண் செலவு செய்யாது, சிறந்ததொரு தெரிவுக்குழுவை நியமிக்க வேண்டும்" என்றார்.

# ஹர்த்தாலுக்கு ஆதரவு தாருங்கள்!

## மட்டக்களப்பில் தமிழ்க் கட்சிகள் கோரிக்கை




- கனகராசா சரவணன் -

"வடக்கு, கிழக்கில் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறும் ஹர்த்தாலுக்கு வர்த்தக சங்கத்தினர், அரச ஊழியர்கள், போக்குவரத்துத்துறையினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசியப் பாதையில் பயணிக்கின்ற கட்சிகள் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன், பா.அரியநேத்திரன், கிழக்கு மாகாண சபை முன்னாள் தவிசாளரும் ரெலோ அமைப்பின் பிரதித் தலைவருமான பிரசன்னா இந்திரகுமார், புளொட் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் கேசவன், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் உயர்பீட உறுப்பினரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான இரா.துரைரெட்ணம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதித் தலைவர் நகுலேஸ் ஆகியோர் கலந்துகொண்டு மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டில் நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் என்றால் இந்த நாட்டில் ஜனநாயகம் எவ்வாறு பயணிக்கின்றது என்பதைச் சிந்திக்க வேண்டும். ஜனநாயக ஆட்சி இல்லாமல் 74 சதவீதமான சிங்கள மக்களின் இனவாத ஆட்சி நடைபெறுகின்றது. வடக்கு – கிழக்கில் தொல்லியல் திணைக்களம் என்ற பெயரில் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அதேபோன்று வன ஜீவராசிகள் திணைக்களம், வனவிலங்கு திணைக்களம், மாகாவலி திணைக்களம் ஊடாக பல்வேறுபட்ட ஆக்கிரமிப்புக்கள் வடக்கு – கிழக்கில் இடம்பெறுகின்றன.

எனவே, இதனைக் கண்டித்தும், வடக்கு – கிழக்கில் ஜனநாயகத்தையும் சட்ட ஆட்சியையும் மனித உரிமையையும் நீதிதுறையின் கௌரவத்தையும் பாதுகாப்பதற்காகவும் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் – கடையடைப்பு – பொது வேலைநிறுத்தத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்" – என்றனர்.

# தடுப்பிலுள்ள இலங்கைப் பெண்கள் மீண்டும் ஜோர்தானுக்கு அனுப்பப்படுவர்

## இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு

இஸ்ரேல் மற்றும் ஜோர்தான் எல்லைப் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு இலங்கைப் பெண்களும் மீண்டும் ஜோர்தானுக்கு அனுப்பப்படவுள்ளனர் என்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

ஜோர்தானில் இருந்து சட்டவிரோதமாக இஸ்ரேலுக்குள் பிரவேசித்த போது கடந்த 14 ஆம் திகதி இரு இலங்கைப் பெண்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த இரண்டு பெண்களின் அடையாளம் தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரண்டு இலங்கை பெண்களும் ஜோர்தான் எல்லை வழியாகச் சட்ட விரோதமாக இஸ்ரேலுக்குள் பிரவேசித்துள்ளனர். எனவே அவர்கள் மீண்டும் ஜோர்தானுக்கு அனுப்பப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இருவரின் பாதுகாப்பு மற்றும் எதிர்கால விவகாரங்கள் தொடர்பாக ஜோர்தானில் உள்ள இலங்கை தூதரகத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவேன் எனவும் தூதுவர் நிமல் பண்டார உறுதியளித்துள்ளார்.



# சமுர்த்தி மாணவருக்கு 'சிப்தொர' புலமைப்பரிசில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுத்துச் செல்லப்படும் 'சிப்தொர' புலமைப் பிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் சம் மாந்துறை அப்துல் மஜீட் ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது .



சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம பிரதம அதிதியாகவும், மேலதிக அரச அதிபர் வீ.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.ஸப்ராஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 195 மாணவர்கள் சிப்தொர புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர்.

# தரம் 5 மாணவி துஷ்பிரயோகம் பிரதி அதிபர் காலியில் கைதானார்!

காலி மாவட்டத்தில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றின் பிரதி அதிபர் ஒருவர் பாடசாலை மாணவி ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த ஆரம்பப் பாடசாலையில் 05 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவரே சந்தேக நபரால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் பெற்றோர் பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் பிரதி அதிபரை கைது செய்துள்ளனர்.

கடந்த 6 ஆம் திகதி அந்த பாடசாலையின் பிரதி அதிபரால் மாணவி துஷ்பிரயோகம் செய்யப்பட்டார் என்று இது தொடர்பான முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நேற்று (16) கராப்பிட்டிய சட்ட வைத்திய அதிகாரியிடம் சிறுமிக்கு வைத்திய பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்ட பின்னர் சந்தேகத்துக் குரிய பிரதி அதிபர் ஹபராதுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். 59 வயதான சந் தேக நபரான பிரதி அதிபர் காலி நீதி வான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஜனாதிபதி முறைமையை...**

அந்தப் பேட்டியில் இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

“தான் என்ன செய்ய வேண்டும் என்று தெரியாத நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தடுமாறுகின்றார். மக்களின் ஆணையை இழந்த ஒரு நாடாளுமன்றத்தில் தங்கி இருக்கும் அவர் அதனால் குழப்பத்தில் மூழ்கியுள்ளார்.

இந்த நாடாளுமன்றம் மக்கள் ஆணையை இழந்து விட்டது என்பது கடந்த வருடமே தெட்டத் தெளிவாகியுள்ளது. இல்லையேல் அப்போது பிரதமர் இராஜினாமா செய்ய வேண்டி வந்திருக்காது. நிதி அமைச்சரும் பதவியை விட்டு விலக வேண்டி நேர்ந்திருக்காது. ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறி பதவி விலக வேண்டி வந்திராது. ஆகவே, அவர்கள் மக்கள் ஆணையை இழந்து விட்டார்கள் என்பது தெட்டத் தெளிவானது.

நாடாளுமன்றத்தில் அவர்களுக்கு உள்ள பெரும்பான்மை போலியானது. அந்தப் போலியான பெரும்பான்மையில் தங்கித்தான் இந்த நாடாளுமன்றம் இயங்குகின்றது. இந்த ஜனாதிபதியையும் அதுவே தேர்வு செய்தது. அதனால் அத்தரப்புகள் இரண்டும் ஒருவரில் ஒருவர் தங்கி உள்ளார்கள். அந்த நாடாளுமன்றத்தைக் கலைக்காமல் அவர்களைப் பதவியில் தொடர செய்ய வேண்டிய அவசியம் இந்த ஜனாதிபதிக்கு இருக்கின்றது.

ஆனால், இந்த விளையாட்டு மக்களின் விருப்புக்கு – ஆணைக்கு – மாறானது. அது அப்பட்டமான உண்மை. இந்த நிலைமை தொடர்வதை மக்கள் விரும்பவில்லை என்பதும் வெளிப்படையானது. ஆனால் ஆட்சியாளர்களின் நிலைமை இந்தப் போக்கை நீடிப்பது என்பதுதான். மக்களின் ஆணை இல்லாமல் தாங்கள் அதிகாரத்தில் உள்ளார்கள், அதை எப்படி நீடிப்பது என்பதுதான் அவர்களின் சிரத்தை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வந்தது. அதற்கான நிதியை விடாமல் தடுத்தார்கள். அதனால் தேர்தல் நடைபெறவில்லை. மக்களை சந்திக்க இடமளிக்கவில்லை.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் வருகின்றது. அதற்கு அடுத்த வருடம் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்து, நாடாளுமன்றத்தின் மூலம் அதிகாரத்தில் தொடரும் அவர்களின் திட்டம் பற்றி பேசப்படுகின்றது. எனக்கு அது குறித்து விவரம் ஏதும் தெரியாது. ஆனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கும் நகர்வு முன்னெடுக்கப்பட்டால் நாம் எப்போதும் அதை ஆதரிக்க வேண்டும். அது, குறுகிய நோக்கத்துக்காகவோ அல்லது சுயநலன்களுக்காகவோ அல்லது வஞ்சக எண்ணத்தோடோ முன்னெடுக்கப்பட்டாலும் கூட அந்த முறைமையை ஒழிப்பதற்கு ஏதேனும் முயற்சி எடுக்கப்பட்டால் – அந்த எதேச்சதிகார முறைமையை நீக்குவதற்கு நாம் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

ஏனென்றால், வேறு வழிமுறைகளில் இந்த முறைமையை ஒழிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காது. இத்தகைய குழப்பமான நோக்கங்களுக்கு மத்தியில்தான் இந்த முறைமையை ஒழிக்க வாய்ப்பு கிட்டும் என்றால் நாம் அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த முறைமை எம்மை விட்டுத் தொலைவதற்கு இதைத் தவிர வேறு வாய்ப்பு கிடைக்காது. கிடைத்தால் நாம் தந்திரோபாயமாக அதைப் பயன்படுத்த வேண்டும்.

ஆனால், அப்படி அந்த ஆட்சி முறைமையை ஒழிப்பதற்காக இடைக்கால ஏற்பாடாக இந்த ஜனாதிபதியின் பதவிக் காலத்தை சற்று காலம் நீடிக்க வேண்டும் என்ற திட்டத்துக்கு நாம் இணங்க முடியாது. மக்களின் வாக்களிக்கும் உரிமையை மறுத்துக் காலம் கடத்தும் – அதிகாரத்தில் நீடிக்கும் – திட்டத்துக்கு நாம் ஒத்துவர முடியாது.” – என்றார்.

**தெரிவுக்குழுவுக்கான...**

ஆவணப்படம் மூலம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக நாடாளுமன்ற விசேட தெரிவுக் குழுவை நியமிப்பதற்கான பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரதீப் உந்துகொடவால் இந்தப் பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பல்வேறு குழுக்களின் விசாரணைகளின் பின்னரும் இந்தச் சம்பவம் தொடர்பில் பல்வேறு தரப்புக்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன என்று 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, நாடாளுமன்ற நிலையியல் கட்டளை 101 இன் விதிமுறைகளுக்கு அமைய 11 பேர் கொண்ட குழுவொன்றை நியமிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சபாநாயகரால் நியமிக்கப்பட வேண்டும் எனவும் முன்மொழியப்பட்டுள்ளது.

எந்தவொரு நபரையும் குழுவின் முன் முன்னிலையாகுமாறு அழைப்பதற்கும், எந்தவொரு நபர் மற்றும் ஆவணம் அல்லது பதிவேட்டைப் பெறுவதற்கும் அத்தகைய ஆதாரங்களை எழுத்து பூர்வமாக அல்லது வாய்மூலமாகப் பெறுவதற்கும் குறித்த குழுவுக்கு அனுமதி வழங்கும் வகையில் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை முழுமையாகப் பரிசீலிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த விசேட குழுவின் முதலாவது கூட்டத்தில் இருந்து இரண்டு மாதங்களுக்குள் அல்லது நாடாளுமன்றம் வழங்கக்கூடிய காலப்பகுதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**தயாசிறிக்கு...**

பதவியையும் வழங்குவதற்கு தயார் என கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தார்.

இதற்கமையவே சிரேஷ்ட உப தலைவர் பதவியை தயாசிறிக்கு வழங்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தற்போது சிரேஷ்ட உப தலைவர்களாக ஆறு பேர் செயற்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தற்சமயம் வெளிநாடு சென்றுள்ளார். அவர் நாடு திரும்பிய பின்னரே அடுத்த கட்ட நகர்வுகள் பற்றி முடிவெடுப்பார் எனத் தெரியவருகின்றது. எனினும், சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறப்போவதில்லை என்ற உறுதியான அறிவிப்பை அவர் விடுத்துள்ளார்.

**மன்னாரில் பஸ்ஸை...**

விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார். ஏனையோர் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவம் இன்று காலை 7:30 மணியளவில் முள்ளிக்குளம் – ஸீனத் நகர் பகுதியில் இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த நபர் சிலாவத்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சிலாவத்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# ஹமாஸின் பிணைக் கைதிகளில் இலங்கையர்களும் உள்ளனர்!

## இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவிப்பு

இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினர் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை பிணைக்கைதிகளாக பிடித்துச் சென்ற நிலையில் அவர்களில் இலங்கையர்களும் அடங்குகின்றனர் என்று இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டவர்களில் 27 இலங்கையர்கள் உள்ளனர். காசாவின் வடக்கு பகுதியில் இருந்து காசாவின் தெற்கு பகுதிக்கு அவர்கள் பயணிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

அத்துடன் காசாவில் வசிக்கும் மக்களுடன் இந்த குழு எகிப்து செல்ல திட்டமிட்டுள்ளது.

தற்போது, காசாவின் வடக்குப் பகுதியில் வாழும் மக்கள் தெற்குப் பகுதிக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். அவர்களில் 27 இலங்கையர்கள் உள்ளதாக பலஸ்தீன அலுவலகத்தில் உள்ள எமது பலஸ்தீன பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், சுமார் 150 இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் ஹமாஸ் அமைப்பிடம் பிணைக் கைதிகளாக உள்ளனர் என்று செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட அனைவரின் விவரங்களையும் அளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இவர்களில் இலங்கையர்கள் உட்பட 36 நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்களும் அடங்குகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஒரே சூலில் ஆறு ஆண் குழந்தைகள் !




கொழும்பு காசல் மகளிர் வைத்திய சாலையில் ராகம பகுதியைச் சேர்ந்த தாய் ஒருவருக்கு ஒரே சூலில் ஆறு குழந்தைகள் பிறந்துள்ளன.

ஆறு குழந்தைகளும் ஆண் குழந்தைகள் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் அஜித் தண்ட நாராயணா உறுதிப்படுத்தியுள்ளளார்.

இலங்கையில் ஒரே பிரசவத்தில் ஆறு ஆண் குழந்தைகள் பிறந்துள்ளமை இதுவே முதல் தடவை ஆகும்.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 ஆம் திகதி முதன்முறையாக ஒரே பிரசவத்தில் பிறந்த 6 குழந்தைகள் பிறந்தன. அதில் மூன்று ஆண் குழந்தைகளும், மூன்று பெண் குழந்தைகளும் பிறந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த அரிய மற்றும் விலைமதிப்பற்ற பிறப்புகள் வாழ்க்கையின் அற்புதங்களுக்கும், சுகாதார நிபுணர்களின் அர்ப்பணிப்புக்கும் சான்றாக விளங்குகின்றன.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிப்பு

"நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதற்கு ஒரு முயற்சி எடுக்கப்படுமானால் அதை ஆதரிப்போம். அந்த எதேச்சதிகார முறைமை நீக்கப்படுவதற்குக் கிடைக்கும் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வோம்."

- இப்படித் தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

ஏற்கனவே இப்பத்தியில் பல தடவைகள் நாம் சுட்டிக் காட்டி வந்த - பிரதிபலித்த - கருத்தியல்தான் அது.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு எதிராக கடந்த 45 ஆண்டுகளாக சிங்கள - பௌத்த பேரினவாதம் வெறியாட்டம் புரிவதற்கான தளத்தைத் திறந்து விட்டு, அந்தக் கொடூரம் குரூரமாகத் தொடர்வதற்கு அடிப்படையாக அமைந்தது இந்த ஆட்சி முறைமைதான்.

அது, அடியோடு ஒழிக்கப்பட்டால்தான் ஜனநாயகத்தின் சில பின்னடைவுப் பண்புகளின் பாதிப்புகள் ஓரளவு குறையும் சந்தர்ப்பம் கிட்டும் என்பது உண்மை.

அட்சர கணித கணக்கில், எண்ணிக்கை கூடிய தரப்பின் நிலைப்பாடு - கருத்து - தீர்ப்பு என்றோ, முடிவு என்றோ தீர்மானிக்கும் மிகப் பின்னடைவான பண்பியல்பை ஜனநாயக முறைமை கொண்டிருந்தாலும், அந்த எண்ணிக்கைக் கணக்குக்குள் புகுந்து விளையாடி, இயன்றளவு நீதியை நோக்கி நகரக்கூடிய வாய்ப்புகள் அதற்குள் இல்லாமல் இல்லை. ஆனால் அதற்கெல்லாம் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை அடித்து மூடி, பேரினவாதிகளினால் - பெரும்பான்மையினரால் - தெரிவு செய்யப்படும் தனி ஒருவரிடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்து, அவர் நிறைவேற்றதிகாரம் மூலம் எதேச்சாதிகாரம் புரியவும், சிறுபான்மையினத்தவரை அடக்கி, ஒடுக்கி அட்டகாசம் புரியவும், வாய்ப்பு அளித்து நிற்பது இந்த நிறைவேற்றதிகார ஆட்சி முறைமைதான்.

அது அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த 45 வருடங்களாக இந்த நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்களுக்குக் கிடைத்து வந்த ஒரே அனுபவம் இதுதான்.

மலையகத் தமிழ் தலைமைகள், முஸ்லிம்களின் தலைமைகள் சில சமயங்களில் இந்த நிறைவேற்றதிகார ஆட்சி முறைமை ஒழிப்பை எதிர்க்கக் கூடும். நிறைவேற்றதிகாரத்தின் உச்சத்தில் இருக்கும் தனி மனிதரான ஜனாதிபதி ஒருவரைத் தாஜா செய்வதன் மூலம் தங்கள் மக்களுக்கோ, தங்களுக்கோ ஏதும் பெறக்கூடிய வாய்ப்பு எளிதில் இருக்கும் என்பதைக் கவனத்தில் கொண்டு, இந்த ஆட்சி முறைமை நீடிப்பதை அவர்கள் சில சமயம் விரும்பக் கூடும். நியாயப்படுத்தக் கூடும். ஆனால், தலைவணங்கி, கூழைக் கும்பிடு போட்டு, தாஜா பண்ணி, உரிமைகளைப் பேசி வாங்கும் போக்குக்கு இணங்காத தமிழர் தலைமைகள் நிச்சயம் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கும் முயற்சிக்கு ஆதரவு வழங்கி நிற்கும் என்பது திண்ணம்.

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வியாழக்கிழமை முத்தமிழ் விழா!

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா நாளை மறுதினம் (19) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் சங்கீத பூஷணம் பூத்தகொடி புகழ் செ. குமாரசாமி அரங்கில் இடம்பெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவபாலன் குணபாலன் கலந்து கொள்வார்.

துணுக்காய் வலய அழகியல் கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் நாகரட்ணம் இராஜன் சிறப்பு விருந்தினராகவும் முகரம் அறக்கட்டளை பொ. பிரசாந்தன், குடத்தனை அ. த. க. பாடசாலை ஆசிரியை பாரத் வீணாவாஹினி வேலுப்பிள்ளை, அறக்கட்டளையைச் சேர்ந்த வே. கஜேந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் தொடக்கவுரையை முத்தமிழ் மன்றக் காப்பாளர் விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமாரும் அரங்கத் திறப்புரையை சங்கீத பூஷணம் கே.எஸ். சிவஞானராஜாவும் நிகழ்த்துவர்.

முத்தமிழ் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு மற்றும் ஆசிரிய மாணவர்களின் நடனம், வில்லிசை, நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.



## பாலமுனை கடற்கரைப் பகுதியில் நடப்பட்டது எச்சரிக்கைப் பதாதை!

(நவாஸ் )

கடந்த தினங்களில் பாலமுனை கடற்கரை பிரதேசத்தில் பாதுகாப்பின்றி நீராடுவது அதிகரித்து வருகின்றது. இதனால் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் பாலமுனை கடற்கரை பிரதேசம் நீராடுவதற்கு உகந்தது அல்ல என்பதை சுட்டிக் காட்டி பிறைட் இளைஞர் அமைப்பு சமூக பாதுகாப்பு நலன் கருதி "எச்சரிக்கை" பாதாதையை நட்டுள்ளது.

இந்த நிகழ்வு அமைப்பின் தலைவர் ஏ.எல்.எம். அர்தாத் தலைமையில் திட்ட ஒருங்கிணைப்பாளர் என். நப்றிஸ் வழிகாட்டலில் இடம்பெற்றது.

## பஸ் நிலையத்தில் கண்டெடுத்த நகையை ஒப்படைத்த தொழிலாளி!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருக்கோவிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி பஸ்ஸில் பயணித்த கூலித் தொழிலாளியான கார்த்திகேசு அக்கரைப்பற்று பஸ் நிலைய வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட தங்க நகைகள் உரியவரிடம் கிடைக்கும் வகையில் செயற்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பொறுப்பதிகாரியிடம் அதனை ஒப்படைத்து அந்த நகை உரியவர்களிடம் சென்றடைய உதவியுள்ளார்.

அவரது சிறந்த செயற்பாட்டுக்கு பாராட்டுகள் கிடைத்துள்ளன.

# கல்முனை நகரை அழகுபடுத்தும் வேலைத் திட்டம் ஆரம்பித்து வைப்பு



(எம்.எம்.றமாஸீன், ஏ.எஸ். மௌலானா)

கல்முனை நகரை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் அடங்கிய பூச்சாடிகள் வைக்கும் வேலைத் திட்டம் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நேற்று (16) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வாறான புதிய திட்டங்களை கல்முனை மாநகரத்தில் அறிமுகப்படுத்தும் ஆணையாளரின் செயற்பாடுகளுக்குப் பிரதேச மக்கள் பெரும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றனர்.

இந்த நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே. எச்.ஜௌஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், தொழில் நுட்ப உத்தியோகத்தர்களான எம்.அமீர், வி.சுகுமார், எம்.ஏ.நிஸார், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.நௌசாத் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் இவ்வேலைத்தின் பிரகாரம் முதற்கட்டமாக கல்முனை மக்கள் வங்கி சந்தி முதல் தரவைக் கோவில் சந்திவரையான இருபக்க போக்குவரத்து பாதையின் நடுவே பூச்சாடிகளை வைத்து அழகுபடுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.




# வகுப்பறைக் கவின் நிலை போட்டிக்கான பரிசளிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

21 ஆம் நூற்றாண்டின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் நோக்கில் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வகுப்பறைக் கவின் நிலைப்போட்டியில் வெற்றியீட்டிய வகுப்புகளுக்கான பரிசளிப்பு விழா அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் தலைமையில் (13) இடம்பெற்றது.

இந்த விழாவுக்குக் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர் பிரதம அதிதியாகவும், முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச். றியாஸா கௌரவ அதிதியாகவும், கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது வெற்றியீட்டிய வகுப்புகளுக்கான வெற்றிக் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.





# அட்டாளைச்சேனை அதிபர்களுக்கு சுகாதார மேம்பாட்டுச் செயலமர்வு

(கே. எ. ஹமீட் )

அட்டாளைச்சேனை கோட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்ட செயலமர்வு நேற்று (16) அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

அட்டாளைச்சேனை கோட்டக்கல்வி அதிகாரி எம்.எச். எம். றஷ்மி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அட்டாளைச் சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம். இஸ்ஸதீன் கலந்து கொண்டு "சுக வாழ்வும் மகிழ்வான மனதும்" என்ற தலைப்பில் விளக்க உரை நிகழ்த்தினார்.

இந்தப் பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் கலந்து கொண்டனர்.

# உளவளத்துணை தினத்தை முன்னிட்டு மண்முனையில் பல்வேறு நிகழ்வுகள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் 15 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு பல்வேறு கருத்துக்கள், சிந்தனைகளை மையப்படுத்தியதாக பல்வேறு நிகழ்ச்சிகள் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டு வருகின்றன.

"அனைவரினதும் உளநலம் மற்றும் நல்வாழ்வை உலக அளவில் முதன்மைப்படுத்துவோம்" எனும் தொனிப் பொருளில் அமைந்த இந்த வருடத்துக்கான உளவளத்துணை தினத்தை முன்னிட்டு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தால் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் மற்றும் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இவை இடம்பெற்றன.

பெரியகல்லாறு மத்திய மகா வித்தியாலய மாணவர்களுக்கான யோகாசனப் பயிற்சி, கோட்டைக்கல்லாறு கல்முந்தல்திருவள்ளுவர் வித்தியாலயத்தில் ஆன்மீகம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் பரீட்சைக்குத் தயாராகுதல் தொடர்பான நிகழ்வு, களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை மற்றும் பொதுச் சந்தையில் வீதியோர விழிப்புணர்வு நாடகங்கள், குருக்கள்மடம் அசீசி சிறுவர் இல்லத்தில் 'கலைகள் மற்றும் அரங்க விளையாட்டுகளுடாக ஆற்றுப்படுத்தல்' எனும் தலைப்பிலான பயிற்சிநெறி என்பன இடம்பெற்றன.

# பெலாரஸ் நாட்டின் எல்லையில் சடலமாக மீட்கப்பட் ட குடும்பஸ்தர்!

கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் பெலாரஸ் நாட்டின் எல்லையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த விடயத்தை அவர்களது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி வட்டக்கச்சி மாயவனூர் பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் யுகதீபன் என்ற நாற்பது வயது மதிக்கதக்க ஐந்து பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்நாட்டு இராணுவத்தினரால் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது–

பிரான்ஸ் நாட்டுக்கு செல்வதற்காக சட்டவிரோத முகவர் ஒருவரை நம்பி விமானம் மூலம் ரஸ்யா சென்றுள்ளார். அங்கிருந்து பெலராஸ், போலந்து, ஜேர்மன் ஊடாக பிரான்ஸ் செல்வதற்காக பெலராஸிலிருந்து போலந்துக்கு சுமார் 700 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து கடப்பதற்காக ஏழு பேர் கொண்ட குழுவுடன் சென்றுள்ளார்.

இதன்போது உடல் நிலை பாதிக்கப்பட்டு பெலராஸ் எல்லையில் உறவினர்களுடன் பேசியுள்ளார். தொடர்ந்து இவரது தொடர்பு கிடைக்கவில்லை.

இந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏனையவர்கள் இவரை விட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை பெலராஸ் எல்லையில் இருந்து சில கிலோ மீற்றர்கள் தொலைவில் உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் வட்டக்கச்சியில் உள்ள மனைவியை தொடர்பு கொண்டு தன்னால் நடக்க முடியாதுள்ளது என்றும் தன்னை யாரேனும் காப்பாற்றினால் அன்றி உயிர் தப்ப வேறு வழியில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அதுவே அவர் இறுதியாக தொடர்பு கொண்டு பேசியது என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.



## அலி ஸாஹிர் மௌலானா இன்று எம்.பியாகப் பதவியேற்பு!

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினரான அலி ஸாஹிர் மௌலானா நாடாளுமன்ற உறுப்பினராக இன்று (17) பதவியேற்றார்.

இன்று (17) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றம் கூடியது.

இதன் போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் அலி ஸாஹிர் மௌலானா நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

முன்னாள் சுற்றுச் சூழல் அமைச்சராக இருந்த அமைச்சர் நசீர் அஹமட் நாடாளுமன்ற உறுப்பினர் பதிவியிலிருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் சிவராஜா வித்தியாலயத்தில் பிள்ளையார், சரஸ்வதி சிலைகள் திறப்பு

(மன்னார் நிருபர்)

சரஸ்வதி பூஜையை முன்னிட்டு மன்னார் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மோட்டக்கடை சிவராஜா இந்து வித்தியாலயத்தில் பிள்ளையார் மற்றும் சரஸ்வதி சிலைகள் திறந்து வைக்கப்பட்டன.

இந்த சிலைகளை நேற்று முன்தினம் (15) காலை 9 மணியளவில் நானாட்டான் பிரதேச செயலாளர் மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமார் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்து மாரியம்மன் ஆலயத்தின் பிரதான குரு சிவஸ்ரீ கதிரேசன் குருக்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



## கிறிஸ்தவ ஒன்றியத்தின் விசேட கலந்துரையாடல்

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் கல்வி அணியின் ஏற்பாட்டில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று (16) மாலை இடம் பெற்றது. சுண்டுக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் அருட்தந்தை ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இஸ்ரேல் பாலஸ்தீன மோதல் தொடர்பான எமது நிலைப்பாடு எனும் தலைப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசியல் துறை பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம் சிறப்புரையாற்றினார். கருத்துரைகளை கல்விக் குழு உறுப்பினர் ஆசிரியர் வேந்தகுமார், தலைவர் அருட் திரு ஞானரூபன், அங்கிலிக்கன் திருச்சபைத் தலைவர் அருட்பணி செல்வன், அருட்திரு ராஜ்குமார் ஆகியோர் வழங்கினர்.







# நெல்லூரில் யானைகள் தாக்குதல்: இரண்டு வீடுகள் இடிந்து வீழ்ந்தன!

## நித்திரையில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நெல்லூரில் குடியிருப்பு பகுதியில் உள்நுழைந்த யானைகள் வீடுகளைத் தாக்கி உடைத்து வீழ்த்தியுள்ளன.

இரு வீடுகள் இடிந்து வீழ்ந்ததில் நித்திரையில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பிய சம்பவம் இன்று செவ்வாய்க்கிழமை (17) அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் யானைகள் குடியிருப்பு பகுதிகளுக்குள் ஊடுருவி விவசாயம் மற்றும் தென்னை, மா, வாழைமரம் போன்ற மரங்களை முறித்து சேதப்படுத்தி வருவது வழமையாகி விட்டது.

இந்த நிலையில் குடிமனைகள் மீதும் தற்போது யானைகளின் தாக்குதல்கள் அதிகரித்துக் காணப்படுகிறது.

அந்த பகுதியில் வசித்துவரும் மக்கள் இரவில் நித்திரையின்றி அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் சம்பவதினமான இன்று அதிகாலை குடிமனைப்பகுதிக்குள் ஊடுருவிய யானைகள் இரண்டு வீடுகளைத் தாக்கி உடைத்துள்ளன.

அங்கு நித்திரையில் இருந்த 2 மாதக் குழந்தையுடனான தாயாரும் அடுத்த வீட்டில் நித்திரையில் இருந்த 4 சிறுவர்கள் உட்பட்ட குடும்பத்தினர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.












# 2023 ஆம் ஆண்டுக்கான அச்சுத்துறை விருதும் கண்காட்சியும்

(அஷ்ரப் ஏ சமத்)

2023 ஆம் ஆண்டுக்கான தேசிய அச்சுத் துறை சார்ந்த விருதுகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சியை எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தினமும் காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை அதிநவீன தொழில்நுட்பங்களின் பிரமாண்டமான நிகழ்வாக இடம்பெற வுள்ளது.

இந்த நிகழ்வுக்கு கல்வியமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்துவைப்பார்.

இதேவேளை, தேசிய அச்சுத்துறை விருதுகள் 2023 எதிர்வரும் 27ஆம் திகதி மாலை கொழும்பு 3 இல் அமைந் துள்ள மரினா பீச் விடுதியில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக பிரதமர் தினேஸ் குணவர்த்தன கலந்து கொண்டு சிறந்த அச்சக விருதுகளை பெற்றவர்களுக்கான சிறப்பு விருது களை வழங்குவார்.

இந்த நிகழ்வுகள் பற்றி விசேட ஊடக வியலாளர்கள் மாநாடு கொழும்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இச் சங்கத்தின் தலைவர் அனில் காரியவாசம், மற்றும் உறுப்பினர்களான நிசாந்த பெரேரா, தேசாந்த சில்வா, சயனக விக்கிரமசிங்க மற்றும் வசந்த பண்டார ஆகியோருடன் இலங்கை அச்சகத்தார் சங்க நிகழ் வின் முகாமையாளர் லொனார்ட் எட்வட் ஆகியோரும் கலந்து கொண்ட னர்.

# மாணவர்களுக்குச் சைக்கிள்கள்



(த.சுபேசன்)

சுன்னாகம் றோட்டரிக் கழகம் மாண வர்களுக்குச் சைக்கிள்களை வழங்கி யுள்ளது.

சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகமானது யூல்கிர்சென் ஜேர்மனி றோட்டரிக் கழகம், ஸ்ரூட் யுனைடெட், பாணாந்துறை றோட்டரிக் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் பெண்கள் மற்றும் சிறுவர் சமூக சேவை கள் அமைச்சுடன் இணைந்து இந்த உதவித் திட்டத்தை வழங்கியுள்ளது.

இதன்போது சங்கானை, யாழ்ப் பாணம், சாவகச்சேரி மற்றும் பருத் தித்துறைப் பகுதிகளைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாண வர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப் பட்டன.



# கட்டாருக்கான இலங்கைத் தூதருடன் 'ஸ்கை' தமிழ் விருதுக் குழு சந்திப்பு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கட்டார் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் மபாஸ் மொஹிதீனை, 2023 ஸ்கை தமிழ் விருது குழு நேற்று முன் தினம் (15) கட்டார் நாட்டுக்கான இலங் கைத் தூதரகத்தில் சந்தித்தது.

தூதரக சிரேஷ்ட அதிகாரி ரஷீத் எம். பியாஸ் (நளீமி), ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித், ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் முகாமையா ளர் அஸ்வர் ரிஸ்வி, தொழிலதிபர், சமூக செயற்பாட்டாளர் யாழினி குமார், என். சி. நிகழ்வு திட்டமிடல் நிறுவனத்தின் பணிப்பளார் நிர்மலா சண்முகபாண்டி யன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தினகரன் மற்றும் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில் நவம்பர் 30ஆம் திகதி இந்திய கலாசார மையம் அசோகா விடுதியில் ஸ்கை தமிழ் விருது விழா நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கட்டார் நாட்டுக்கான இலங்கைத் தூ துவர் மபாஸ் மொஹிதீனை அழைப் பதற்காக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த சந்திப்பில் விருது விழா சம்பந் தமாக சில ஆலோசனைகளையும் தூ துவர் வழங்கியிருந்தார்.

இன, மத வேறுபாடின்றி அனை வரை யும் இணைத்துக் கொண்டு இதனைச் செயற்படுத்த வேண்டும் என்பதை அவர் அவ்விடத்தில் வலியுறுத் தியுள்ளார்.



# பல்லூடக கருவிகள் வழங்கல்

(எம்.ஏ.ஏ.அக்தர் )

சாய்ந்தமருது அல் ஜலால் வித்தி யாலயத்துக்கு றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி மற்றும் சமூக சேவை அமைப்பின் ஊடாக அதன் தலைவர் றிஸ்லி முஸ்தபாவால் பல்லூடக கருவி வழங் கப்பட்டது.

ஏற்கனவே இந்த பல்லூடக வகுப்பறைக்காக ஒரு ஸ்மார்ட் ரி.வியும் ஒரு மடிக்கணணியும் இந்த அமைப்பால் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் முஹம்மட் சைபுதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் கோட்டக் கல்வி பணிப்பாளர் எம் .எம் இஸ்மா யில் , அமைப்பின் செயலாளரும் திடீர் மரண விசாரணை அதிகாரியுமான அல் – ஜவாஹிர் மற்றும் பாடசாலை பிரதி அதிபர், உதவி அதிபர்கள் ஆசிரியர்கள் , மாணவர்கள் கலந்து கொண்டனர்.





# சொல்வேந்தர் சுகி சிவம் யாழ்ப்பாணத்தில் உரை

தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்த சொல்வேந்தர் சுகி சிவத்தின் சிந்தனை உரை யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள அறிவு திருக்கோவிலில் நடைபெற்றது.

நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (15) அறிவு திருக்கோவில் தலைவர் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சின்னத்துரை முருகானந்தவேல் தலைமையில் நடைபெற்றது.


நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரம்கலந்து கொண்டார்.

அறிவுலக சங்கம நிகழ்வை யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் அறங்காவலர் அருள்நிதி பொ. ஜமுனாதேவி தொகுத்து வழங்க, இறை வணக்கத்தையும் குரு வணக்கத்தினையும் யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் அறங்காவலரும் துணைப் பேராசிரியருமான அருள்நிதி க.ஜெயராணி நிகழ்த்தினார்.

தவ உரையைப் பொறுப்பாசிரியரும் துணைப் பேராசிரியருமான அருள்நிதி நா.ஜெயகிருஷ்ணன் நிகழ்த்த வரவேற்புரையை யாழ். மனவளக்கலை மன்றத்தின் அறக்கட்டளையின் செயலாளரும் மனவளக்கலை பேராசிரியருமான அருள்நிதி வே.பாஸ்கரன் நிகழ்த்தினார்.

வாழ்த்துரையை யாழ். மனவளக்கலை மன்றத்தின் அறக்கட்டளையின் துணைத்தலைவரும் யாழ். மண்டலத்தின் தலைவருமான துணைப் பேராசிரியர் அருள்நிதி த.குழந்தைவேல் நிகழ்த்த தலைமையுரையை யாழ். மனவளக்கலை மன்றத்தின் அறக்கட்டளை மற்றும் யாழ். அறிவு திருக்கோவிலின் தலைவரும் மனவளக்கலை பேராசிரியருமான அருள்நிதி சின்னத்துரை முருகானந்தவேலும் சிறப்புரையினை ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி அலகின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவனும் நிகழ்த்தினர்.

"மனவளக்கலை ஓர் அறிமுகம்' எனும் தலைப்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மனவளக்கலை பேராசிரியர்




அருள்நிதி செ.ராம்குமாரியும் பிரதம விருந்தினர் உரையை யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாதசுந்தரமும் ஆற்றினர்.

சிறப்பு சிந்தனை உரையை 'மன சக்தியும் மன அமைதியும்' எனும் தலைப்பில் சொல்வேந்தர் சுகி சிவம் ஆற்றினார்.

உரை நிறைவுற்றதும் சொல்வேந்தர் சுகி சிவம், யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரம் ஆகியோருக்கு நினைவுக் கேடயம் வழங்கப்பட்டது.



# இணைய வெளியில் வன்முறைகளுக்கு இலக்காகும் பெண்கள், சிறுவர்களும்...!



டிஜிட்டல் யுகத்தில் சமூக ஊடகங்களின் எழுச்சியானது உலகமயமாக்கலை எளிதாக்கியுள்ளதுடன் கணினி, ஸ்மார்ட்போன்கள் போன்றவற்றில் இணையம் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புவியியல் பரப்புகளைக் கடந்து பயனர்கள் தமக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல், கல்வி, வணிக மற்றும் அரசியல் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளுதல், புதிய புதிய விடயங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளுதல் எனப் பல்வேறு வழிகளில் அனுகூலங்களை பெற்றுக் கொள்கின்றனர்.

அதேவேளை இணைய பயன்பாட்டால் இணைய வழி வன்முறைகளுக்கு ஆளாகின்ற தன்மையும் காணப்படுகின்றது.

முநீஜமுளு குழுவின் உலகளாவிய சமூக ஊடகப் பயனர்கள் தொடர்பான புள்ளிவிபர அறிக்கையின் படி, ஜுலை 2023 இல் உலகம் முழுவதும் 4.88 பில்லியன் சமூக ஊடக பயனர்கள் உள்ளனர் என்றும் இது மொத்த உலக மக்கள் தொகையில் 60.6 சதவீதத்தினர் என்றும் குறிப்பிடுகின்றது.

கடந்த 12 மாதங்களில் சமூக ஊடகப் பயனர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்ததுடன், கடந்த ஆண்டில் 173 மில்லியன் புதிய பயனர்கள் சமூக ஊடகத்தில் இணைந்துள்ளனர் என்றும் தரவுகள் குறிப்பிடுகின்றன.

உலகில் மிகவும் பரவலாக பயன்படுத்தப்படும் சமூக ஊடகத்தளமாக முக நூல் காணப்படுவதுடன் இதில் 2.989 பில்லியன் மாதாந்திர செயலில் உள்ள பயனர்கள் உள்ளனர்.

KEPIOS இன் ஏப்ரல் 2023 அறிக்கையின்படி, உலகின் மிகவும் இயங்கு நிலையிலுள்ள சமூக ஊடகங்களின் தரவரிசையில் முதலாவது இடத்தை முகநூல் தளம் பிடித்துள்ளது.

சமீப காலங்களில் சமூக ஊடகங்களே இணைய வன்முறைக்கான பிரதான தளமாக அமைகின்றன. இலங்கையைப் பொறுத்த வரையில் முகநூல் தளத்திலேயே அதிகளவான இணையவழி வன்முறைகள் இடம்பெறுகின்றன என்று Sri Lanka Computer Emergency Readiness Team (SLCERT) நிறுவனம் குறிப்பிடுகின்றது.

யதார்த்த உலகில் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகள் மற்றும் பாரபட்சங்களின் நீட்சியாக எண்ணிம மற்றும் இணைய வெளிகளிலும் இணைய வழி வன்முறைகளில் பெரும்பாலானவை பெண்கள், சிறுவர்கள் மற்றும் LGBTQ சமூகத்தினருக்கு எதிரானவையாகவே அமைகின்றன.

SLCERTநிறுவனத் தரவுகளின் படி, கடந்த ஆண்டு (2022) சமூக ஊடகங்களில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் 15,509 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அவற்றுள், 70 சதவீதத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் முகநூல் பயனர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றன என்று தரவுகள் குறிப்பிடுகின்றன.

எண்ணிம (Digital) மற்றும் ஊடாடும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தொலைபேசி, இணையம், சமூக வலைத்தளங்கள் மற்றும் மின்னஞ்சல் போன்றவற்றில் இடம்பெறும் தொடர்பாடல்கள் மற்றும் தகவல்களினை பகுதியளவிலோ அல்லது முழுமையாகவோ பயன்படுத்தி ஒரு தனிநபர் அல்லது குழுவின் ஒருவர் கேலி செய்யப்பட்டாலோ, மிரட்டப்பட்டாலோ, பாரபட்சத்துக்கு ஒள்ளாக்கப்பட்டாலோ அல்லது கட்டாயப்படுத்தப்பட்டாலோ அதன் விளைவாக உளவியல், உணர்ச்சி, பொருளாதார மற்றும் உடல் நிலைக்கு எதிராகத் தீங்கு விளைவிக்கும் எந்தவொரு நிகழ்நிலை நடத்தையையும் இணைய வன்முறையாக வரையறை செய்து கொள்ளலாம்.

இணைய வன்முறைகள் நிகழ் நிலையில் (Online) நிகழ்ந்தாலும், அவை அகல் நிலையில் (Offline) ஆரம்பமாவதுடன், அவற்றால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளும் அகல் நிலைக்கு உரியதாகவே அமைகின்றன.

இணைய வன்முறையினுள் திங்கள்கிழைக்கும் குறுஞ்செய்திகள் அல்லது மின்னஞ்சல்கள், மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும் போலி மற்றும் தவறான தகவல்கள் அல்லது சமூக வலைதளங்களில் வெளியிடப்படும் அவதூறுகள், மற்றவரின் அனுமதியின்றி அந்தரங்க படங்கள், வீடியோக்கள், உரைகளை பகிர்தல் , துன்புறுத்தல், இணைய வெளியில் பின் தொடர்தல், மிரட்டல் ஆகியவை அடங்கும்.

இணைய அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நபருக்கு, அச்சுறுத்துபவர் யார் என்பது அநாமதேயமாக இருப்பதால் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் சுதந்திரமாக செயற்படுவதற்கான வாய்ப்பு உருவாகிறது. குற்றச் செயல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது கடினமானதாக அமைகின்றது.

இலங்கையில் சமூக ஊடகக் கட்டுப்பாடு இல்லாததால், கடந்த சில ஆண்டுகளாகப் பேஸ்புக், வாட்ஸ்அப் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற மெட்டா தளங்களில் முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இணையவழியில் ஆண்களும் பெண்களும் துன்புறுத்தல்களை எதிர்நோக்குகின்றனர் என்பதில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கடந்த பல வருடங்களில், தமது பால்நிலை, இனம், மதம் அல்லது பாலியல் ஈர்ப்பு மற்றும் பாலியல் நோக்கு நிலை காரணமாகத் தமக்கு துன்புறுத்தல்கள் இடம்பெற்றதாக இணையவழியில் இலக்குக்கு உள்ளானவர்கள் கூறுகின்றனர்.

பியூ ஆராய்ச்சி நிலையத்தின் ீநற சுளநயசஉா ஊநவெசந 2020) தரவுகள், கடந்த மூன்று வருடங்களில் ஆண்களுடன் ஒப்பிடும் போது, பாலியல் தொல்லைகளுக்கு ஆளான பெண்களின் எண்ணிக்கை இரு மடங்காக உள்ளது என்று குறிப்பிடுகின்றது.

கோவிட்-19 பெருந்தொற்றின் பின்னரான கல்விச் செயற்பாடுகள் நிகழ் நிலையில் அதிகளவில் இடம்பெற்றள. இந்த நிலையில் இணைய பாவனை அதிகரித்தமையால் சிறுவர்கள் இணைய வன்முறைகளை அதிகளவில் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

சேவ் த சில்றன், வேள்ட் விஷன், லீட்ஸ் ஆகியன நடத்திய நிகழ்நிலையில் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறை தொடர்பான ஆய்வில், பத்தில் மூன்று சிறுவர்கள் இணையவழி வன்முறையை அனுபவித்துள்ளனர் என்றும் ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண்களே அதிகம் வன்முறைக்கு ஆளாகியுள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது.

பெற்றோர்களில் 73 சதவீதத்தினர் தமது பிள்ளைகளின் ஒலைன் நடத்தையில் அக்கறை இன்றிச் செய்யப்

**(15ஆம் பக்கம் பார்க்க)**

# இணைய வெளியில் வன்முறைகளுக்கு...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டமையும் இந்த வன்முறைகளுக்கான பிரதான காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது.

உலகின் எந்தவொரு இடத்திலும் தொலைத் தொடர்பு இணைப்பை இலகுவாக அணுகக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தொழில்நுட்பம், பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது ஊறு விளைவிக்கும் ஒரு கருவியாக மாறிவிட்டது என்று ஐ.நா. மன்றம் எச்சரிக்கிறது.

உலகெங்கும் ஏற்கனவே பல கோடிக் கணக்கான பெண்கள், அவர்கள் பெண்களாக இருப்பதலேயே, பாலியல் ரீதியான வீட்டு வன்முறைக்கு இலக்காகிறார்கள். இணைய வெளியில் இது போன்ற மோசமான நடத்தைகளில் 95 சதவீதம் பெண்களை நோக்கியதாகவே உள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபையின் தரவுகள் குறிப்பிடுகின்றன.

பெண்கள் திட்டமிட்ட வகையில் இணைய வெளியில் மோசமான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி விமர்சிக்கப்படுதல், அவதூறுக்குள்ளாக்கப்படுதல், வெறுப்புப் பேச்சுகள் மூலமாக, அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பொது வெளிக்குக் கொண்டு வருவதன் வாயிலாக அவர்களைச் சமூகத்தில் இருந்து ஓரங்கட்டுதலும் பொதுவாகவே இணையவழி வன்முறைகளில் இடம்பெறுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

அதுமட்டுமன்றி, சமூக ஊடகக் கணக்குகள் 'ஹெக்' செய்யப்படுதல், கடவுச் சொற்களை களவாடுதல், கணினிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் மென்பொருள்களைக் கணக்குகளுக்குள் ஊடுருவச் செய்தல், அனுமதியின்றித் தனிப்பட்ட படங்களை வெளியிடுவது, அதனை பிரதியிட்டு (ஆழிலை) ஆபாசப் படமாக்குதல் போன்ற பல்வேறு துன்புறுத்தல்களும் மோசடிகளும் பெண்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் சர்வோதய உயர் கற்கை நிறுவனம் ஆகியவை இணைந்து சமூக ஊடகங்கள் மற்றும் வன்முறை தொடர்பான இளைஞர்கள் மத்தியில் நடத்தப்பட்ட நிகழ்நிலை ஆய்வின் படி, பங்குபற்றிய இளைஞர்களின் கருத்தின் பிரகாரம், இலங்கையில் சமூக ஊடக வன்முறைகளால் பெண்கள் (40 சதவீதம்), சிறுவர்கள் மற்றும் கட்டிளம் பருவத்தினர் (29 சதவீதம்), மற்றும் சிறுபான்மை இனக் குழுக்கள் (7 சதவீதம்), LGBT சமுதாயத்தினர் (4 சதவீதம்) போன்றோரும் மிகவும் பாதிக்கப்படும் குழுக்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இணைய வழியில் பொய்யான தகவல்களைப் பயன்படுத்தல் என்பது சமூக ஊடகங்களில் இடம்பெறும் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறைகளில் முக்கியமானதாகும்.

சமூக ஊடகங்களில் பெரும்பாலும் போலி தகவல்கள், செய்திகள் பரப்பப்படுகின்றன. இலங்கையில், போலிக் கணக்குகள் ஊடாக அனுப்பப்படும் விடயங்கள் தொடர்பாக சமூக ஊடகங்களின் பல பயன்படுத்துனர்கள் பிரச்சினைகளை அனுபவித்துள்ளனர். மக்கள் தவறான தகவல்களைப் பரப்புவதற்கும், பல்வேறு வழிகளில் மக்களை ஏமாற்றுவதற்கும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர்.

முகநூல் நிறுவனம் வேண்டுகோள்களின் பிரகாரம் குறிப்பிட்ட அளவு போலிக் கணக்குகளை அகற்றிய போதிலும், இந்த நிலைமை தொடர்பாகப் போதியளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இணையவழி வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களில் ஒரு சிலர் தங்களது செயற்பாடுகளில் இருந்து பின்வாங்கும் போக்கையும், நீண்ட காலத்துக்குச் சமூக ஊடகங்களில் இருந்து விலகியிருப்பது போன்ற சில முடிவுகளை விரும்பியோ விரும்பாமலோ எடுக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

சமூக ஊடகங்களில் துன்புறுத்தலுக்குள்ளாகும் போது சமூக நெறிமுறைகளுக்கு பயந்து, அதனை வெளிப்படுத்துவதற்கும், எதிராகப் போராடுவதற்கும் பெண்கள் தயங்குகின்றனர். இதனால் பாதிக்கப்படும் பெண்கள் மனத் தைரியம் இன்றி - மன உளைச்சலுக்கு ஆளாகித் தற்கொலை முடிவுகளை எடுத்து உயிரை மாய்த்துக் கொள்ளும் நிலைமைகளுக்குத் தள்ளப்படுகின்றனர்.

இலங்கையில் சமூக ஊடகத் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறைக்கான மூல காரணங்களை கண்டறிந்து அதனூடாக இணைய வழி வன்முறைகளை இழிவளவாக்க வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

நிகழ்நிலை சமூக ஊடகத் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறைக்கு இட்டுச் செல்வதற்கான பிரதான காரணம் விழிப்புணர்வின்மையே என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

அதிகளவான டிஜிட்டல் கல்வி அறிவுடையவர்களுடன் ஒப்பிடுகையில் ஏனையவர்களே பெரும்பாலான இணையவழி வன்முறைகளால் பாதிக்கப்படுபவர்களாகக் காணப்படுகின்றனர்.

சமூக ஊடக நிறுவனங்கள் சமூக ஊடக கணக்குகளை ஆரம்பிப்பதற்கான ஆவண ரீதியான ஒழுங்கு விதிகளை முறைப்படுத்துவதும் நடைமுறையிலுள்ள பொறி முறைகள் பற்றிய பகிரங்க அறிவூட்டலை மேற்கொள்வதும் முக்கியமானதாகும்.

டிஜிட்டல் பாதுகாப்பைத் தாபித்தல் மற்றும் இணையத்தளம் சார் குற்றங்கள், நிகழ்நிலை மற்றும் சமூக ஊடக வன்முறைகளுக்கான முறைப்பாட்டைப் பெறுவதற்கான பயனுறுதியான நேரடித் தொலைபேசித் தொடர்பு ஒன்றைத் உருவாக்குதல் வேண்டும்.

சமூக ஊடகங்களில் இருந்து ஒதுங்கி இருத்தல் இதற்கான தீர்வல்ல. மாறாக, ஒரு நெருக்கடியின்போது இணையத்தை முழுவதுமாக முடக்கி விடுவதை விட, சமூக ஊடகத்தால் ஏற்படும் ஆபத்துகளைத் தணிப்பதற்கான நிறுவன ரீதியான ஆற்றலை அரசு பலப்படுத்துதல் வேண்டும்.

தற்போதுள்ள பொறிமுறைகளை வலுப்படுத்தவும், சமூக ஊடக நிறுவனங்களுக்கு இறுக்கமான சுய ஒழுங்கு விதியை அரசு வலியுறுத்துதல் போன்ற நடைமுறைகளை மேம்படுத்த வேண்டும்.

**மரியதாசன் பூவியர் லூர்ட்ஸ் நிவேதிகா,**
இரண்டாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# கல்முனை மாநகர சபையில் ஊழியருக்குப் பிரியாவிடை

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையில் ஊழியர்களாக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் கே.கந்தசாமி, ஐ. இராமச்சந்திரன் ஆகியோருக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை (16) மாலை நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே. எச்.ஜெளஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், சுகாதாரப் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக் ஆகியோர் கலந்து கொதண்டனர். இரு ஊழியர்களதும் நீண்ட கால அர்ப்பணிப்பு நிறைந்த உன்னத சேவைகள் பற்றி எடுத்துரைத்து, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.



# திருத்தப்பட்ட ஹட்டன் பஸ் தரிப்பிடம் மக்களின் பாவனைக்காகத் திறப்பு!

(மஸ்கெலியா நிருபர்)

புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள ஹட்டன் பஸ் தரிப்பிடம் மக்களின் பாவனைக்காக நேற்றுக் (16) கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், அமைச்சர் ஜீவன் தொண்டமானின் இணைப்புச் செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ், மக்கள் தொடர்பு அதிகாரி தயாளன் குமாரசுவாமி, நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனின் பிரத்யேக செயலாளர் நவரட்ணம், இணைப்பு செயலாளர் ஜெய பிரமதாஸ், ஹட்டன் டிக்கோயா நகர சபையின் செயலாளர் பண்டார மற்றும் அதிகாரிகள், ஹட்டன் பொலிஸ் நிலைய அத்தியட்சகர், ஹட்டன் சாரதி சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஹட்டன் பஸ் தரிப்பிடம் குன்றும், குழியுமாகவே காணப்பட்டது. மழை காலங்களில் பஸ் தரிப்பிடத்தில் நீர் தேங்குவதால் பயணிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் பஸ் தரிப்பிடத்தைப் புனரமைத்துத் தருமாறு மக்கள், சாரதிகள், நடத்துனர்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் கிராம மக்கள் உள்ளிட்டோர் அமைச்சர் ஜீவன் தொண்டமானிடமும், நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனிடமும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இந்த நிலையில் பஸ் தரிப்பிட நிலைய வீதி மற்றும் வடிகாலமைப்பு ஆகியன புனரமைப்பு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டன.

# சாய்ந்தமருது கடலரிப்பைத் தடுக்க ஒரு வார காலத்தில் நிர்மாணப் பணி!

## கரையோர மூல வள முகாமை திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர் )

சாய்ந்தமருது பிரதேசத்தின் கடலரிப்பை கட்டுப்படுத்த 07 தடுப்பணைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ள நிலையில் ஒரு வாரத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூல வள முகாமை திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் திருமதி எல்.டி .ரூனஹே தெரிவித்தார்.



அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது, மாளிகைக்காடு, கல்முனை கரையோர பிரதேசங்கள் கடலரிப்புக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் இருக்கிறது.

இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுத்து கரையோரத்தை பாதுகாக்கும் அவசியம் தொடர்பில் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் ஆயியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமை திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போது கரையோர பிரதேசங்கள் பாதிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் காணொளி மற்றும் புகைப் படங்களை கொண்டு திணைக்கள பணிப்பாளருக்கு விளக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம். எம் ஹரீஸ், கரையோர பிரதேசம் உள்ளமை தொடர்பில் முழுமையாக விளக்கினார்.

நிலைமைகளை கேட்டறிந்த கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் , அண்மையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் கடலரிப்பைக் காட்டுப்படுத்த அவசர நடவடிக்கை எடுப்பார் என்று உறுதியளித்தார்.

# தன்பாலின திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் இல்லை!

## இந்திய உச்ச நீதிமன்றம் அறிவிப்பு



தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் வழங்கு வதை நாடாளுமன்றம், சட்டமன்றங்களே முடிவு செய்யும் என உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டிஒய் சந்திரசூட் தெரிவித்துள்ளார்.

தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் கோரும் வழக்கில், தலைமை நீதிபதி டிஒய் சந்திரசூட், நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், எஸ்.ரவீந்திர பட், ஹீமா கோலி, பிஎஸ் நரசிம்மா ஆகியோர் அடங்கிய அமர்வு 4 வெவ்வேறு தீர்ப்புகளை வழங்கியுள்ளது.

தலைமை நீதிபதி டிஒய் சந்திரசூட் முதலில் தீர்ப்பை வாசித்தார். அதில் அவர், உச்ச நீதிமன்றத்தால் சிறப்புத் திருமணச் சட்டத்தை ரத்து செய்ய முடியாது. அதில் தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமணத்தை அங்கீகரிக்கும் ஷரத்தை சேர்க்கவும் முடியாது. திருமணங்கள் தொடர்பான சட்டங்களை நாடாளுமன்றமும், சட்டமன்றங்களும் தான் இயற்ற முடியும்.

அதேவேளையில் திருமண பந் தம் என்பது நிலையானது அல்ல. தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமண பந்தத்தில் இணைய உரிமையும், சுதந்திரமும் உள்ளது. அதுபோன்ற இணையேற்புகளை அங்கீகரிக்க முடியாமல் போவது அச்சமூகத்தினர் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். அவர் களால் இப்போதுள்ள சட்டத்தின் படி திருமணத்துக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ள இயலாது என்பதால் நாடாளு மன்றமும், சட்டமன்றங்களுமே தன்பா லின ஈர்ப்பாளர்கள் திருமணத்தை சட்டபூர்வமாக அங்கீகரிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டும். தன்பாலின ஈர்ப்பாளர்களின் உறவு அரசால் அசட்டை செய்யப்படவோ அல்லது பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதோ கூடாது என்று தெரிவித்துள்ளார்.

நீதிபதி பட் கூறுகையில், திருமண பந்தங்களை சட்டங்கள் தான் அங்கீகரிக்கும். இந்த நீதிமன்றம் அதற்கான சட்டங்களை இயற்றும்படி அரசை வலியுறுத்த மட்டுமே முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இணையேற்புகள் சட்ட அங்கீகாரம் இல்லாமல் உயிர்ப்புடன் இருக்க இயலாது. ஒரு அமைப்பை உருவாக்குவது என்பது அரசின் கையில்தான் இருக்கிறது. அத்தகைய அமைப்பை உருவாக்க நீதிமன்றம் வாயிலாக வலியுறுத்தலாம் என்று நீதிபதி பட் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நீதிபதி கவுல் அளித்தத் தீர்ப்பில், தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்தை அங்கீகரிப்பதன் மூலம் திருமண சமத்துவத்தில் அடுத்த அடியை எடுத்துவைக்கலாம் என்று தீர்ப் பளித்துள்ளார்.

5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் ஈடுபட்டிருந்த பெண் நீதிபதி ஹீமா கோலி தீர்ப்பேதும் வழங்கவில்லை. இந்த வழக்கில் 5 இல் நான்கு நீதிபதிகள் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

அதில் 3 நீதிபதிகள் தன்பாலின திருமணத்தை சட்டபூர்வ அங்கீகரிப்பது நாடாளுமன்றம், சட்டமன்றங்களால் மட்டுமே முடியும் என்ற நிலைப்பாட்டினை எடுத்துள்ளனர்.

முன்னதாக, இந்த வழக்கு விசாரணையின்போது உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ததுபோது, தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று கோருவது நகர்ப்புற மேல்தட்டுப் பார்வை. தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணங்களை ஆதரிப்பதன் மூலம் ஒரு புதிய சமூக நிறுவனத்தை உருவாக்க நீதிமன்றம் முயலக் கூடாது. நீதிபதிகள் இந்தப் பணியை நாடாளுமன்றத்திடம் விட்டுவிட வேண்டும்.

இதுபோன்ற 'வேறு வகை' திருமணங்களை சமூக ரீதியாகவும், மத ரீதியாகவும் ஏற்றுக்கொள்வதா வேண்டாமா என்பது குறித்து மக்கள் முடிவு செய்வார்கள். ஒரு புதிய சமூக நிறுவனத்தை உருவாக்குவதற்கு உரிமை உண்டு என்பதாகவோ அல்லது அது தனி நபர் விருப்பம் என்பதாகவோ உரிமை கோர முடியாது. இது அடிப்படை உரிமையாகாது. தனி நபரின் விருப்ப உரிமையில் தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்தை அங்கீகரிப்பதற்கான உரிமை இல்லை. தற்போது திருமணம் என்பது சட்டத்தின்படியும், மதத்தின்படியும் புனிதமான ஒன்றாக, பன்முகத்தன்மை கொண்ட அமைப்பாக உள்ளது. தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் அளிக்கப்பட்டால், அது ஒவ்வொரு குடிமகனின் நலன் களையும் தீவிரமாக பாதிக்கும் என்று தெரிவித்திருந்தது.

# இலங்கையிலிருந்து 100 கிலோ தங்கம் கடத்தல்!

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு கடல் வழியாக 100 கிலோ தங்கம் கடத்தப்பட்டுள்ளது என மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னை பாரிமுனை, சவுகார் பேட்டை பகுதிகளில் கடத்தல் தங்கம் விற்கப்படுகிறது என தகவல் வெளியானது.

இதையடுத்து மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகள் நடத்திய சோதனையில் கடந்த 13 ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்றம் அருகே 11.794 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டது.

தங்கம் உருக்கும் கடையில் இருந்து 3.3 கிலோ தங்கமும் திருச்சியில் இருந்து சென்னை சென்ற காரில் 7.55 கிலோ தங்கமும் கைப்பற்றப்பட்டன.

கடந்த 11 ஆம் திகதி சென்னை விமான நிலையத்தில் 2.97 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. சவுதி அரேபியாவில் இருந்து இலங்கை கொண்டு வரப்பட்டு மீன்பிடி படகுகள் வழியாக தமிழகத்துக்கு தங்கம் கடத்தி வரப்படுகிறது என தகவல் வெளியாகி உள்ளது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 15 கோடி ரூபா மதிப்பிலான 25 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து மத்திய வருவாய் புலனாய்வு துறையினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அமெரிக்க ஜனாதிபதி பைடன் நாளை இஸ்ரேலுக்கு பயணம்!



இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் இதுவரை இல்லாத அளவுக்கு மிகுந்த வீரியத்துடன் நடந்துவரும் சூழலில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நாளை புதன்கிழமை இஸ்ரேல் செல்கிறார். இதனால், இஸ்ரேல் திட்டமிட்டுள்ள தீவிர தரைவழித் தாக்குதல் நிறுத்தப்படுமா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

இதனை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அண்டனி பிளின்கன் உறுதிப்படுத்தியுள்ளார். இஸ்ரேல் பயணத்துக்காக ஏற்கெனவே திட்டமிட்டிருந்த கொலராடோ பயணத்தை பைடன் ஒத்திவைத்துள்ளார்.

இஸ்ரேலில் தாக்குதல்களை நடத்திய ஹமாஸ் தீவிரவாதிகள் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும். அதேநேரம் பாலஸ்தீன மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்பட கூடாது. பாலஸ்தீனத்தின் காசா பகுதியை இஸ்ரேல் ஆக்கிரமிக்க கூடாது. இது மாபெரும் தவறாகிவிடும் என்று ஜோ பைடன் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், அவர் இஸ்ரேல் செல்லவிருக்கிறார். அவரது இஸ்ரேல் பயணம் சர்வதேச அளவில் கவனத்தை பெற்றுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி பாலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேலின் தெற்கு பகுதி மீது தரை, கடல், வான் வழியாக தாக்குதல் நடத்தினர். அன்றைய தினம் இஸ்ரேல் நகரங்களை குறிவைத்து 5,000 இற்கும் மேற்பட்ட ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டன. சுமார் 1,200 ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேலின் தெற்குப் பகுதியில் நுழைந்து ஏராளமான இஸ்ரேலியர்களை சுட்டுக் கொன்றனர். பலரை பணயக்கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

இதைத் தொடர்ந்து ஹமாஸ் தீவிரவாதிகள் மீது இஸ்ரேல் இராணுவம் போர் தொடுத்தது. இரு தரப்புக்கும் இடையே 11 ஆவது நாளாக போர் இடம்பெற்றுவரும் சூழலில் காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 2 ஆயிரத்து 808 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 10 ஆயிரத்து 859 பேர் காயமடைந்துள்ளனர் என்று பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 254 பாலஸ்தீனியர்கள் இறந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் 64 சதவீதம் பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆவர். அதேபோல வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்கள் உட்பட 37 மருத்துவ ஊழியர்கள் இறந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவில் 141 சதுர மைல் பரப்பளவில் உள்ள பகுதியில் தரைவழித் தாக்குதலை தீவிரப்படுத்த இஸ்ரேல் முனைப்புடன் முன்னேறி வருகிறது. ஹமாஸ் தீவிரவாதிகளை முற்றிலும் அழிக்கும் முயற்சியாக இதனை இஸ்ரேல் கருதுகிறது.

இந்தச் சூழலில்தான் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் பிளின்கன் ஜனாதிபதி பைடன் இஸ்ரேல் செல்வதை உறுதி செய்துள்ளார். இதனால் பேரழிவை ஏற்படுத்தும் தரைவழித் தாக்குதல் தவிர்க்கப்படுமா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

இஸ்ரேல் தாக்குதலால் காசாவில் உள்ள 23 லட்சம் மக்கள் மின்சாரம், சுகாதார வசதிகள், தண்ணீர், போதிய உணவின்றி தவிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காசா மீதான தாக்குதலை நிறுத்தாவிட்டால் இஸ்ரேலுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும்

## – ஈரான் அமைச்சர் எச்சரிக்கை

காசா மீதான தாக்குதலை நிறுத்தாவிட்டால் இஸ்ரேலுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஹுசைன் அமீர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச போர் விதிகளை மீறி பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும் மறைமுகமாக போரில் ஈடுபட்டு வருகிறது. காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் நிறுத்தாவிட்டால் அந்த நாட்டுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும். மிகப்பெரிய பூகம்பத்தை இஸ்ரேல் சந்திக்கும் என்று ஈரான்



அமைச்சர் ஹுசைன் அமீர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா அந்த நாட்டில் ஓர் அரசியல் அமைப்பாக செயல்படுகிறது. இதனை மேற்கத்திய நாடுகள் தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ளன.

ஹிஸ்புல்லா அமைப்பில் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் உள்ளனர். அந்த அமைப்பிடம் ஈரான், ரஷ்ய தயாரிப்பு பீரங்கி, ஆயுதங்கள் உள்ளன.

அதோடு ஹிஸ்புல்லாவிடம் சுமார் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட ஏவுகணைகள் உள்ளன. இதன்மூலம் இஸ்ரேல் மீது தினமும் 3,000 ஏவுகணை குண்டுகளை வீசும் திறன் ஹிஸ்புல்லா அமைப்புக்கு இருக்கிறது என கூறப்படுகிறது.